(6 pages)

**1501/1AO** **OCTOBER 2011**

## Part I — TAMIL

Time : Three hours Maximum : 100 marks

1. பின்வரும் வினாக்களுள் ஐந்துனுக்கு மட்டும் ஆறு வரிகளில் விடை தருக. (5 × 3 = 15)

(அ) பாரத நாட்டின் பெருமைகளாகப் பாரதியார் உரைப்பன யாவை?

(ஆ) உயிரினும் ஓம்பப்படுவது எது? என்?

(இ) மெய்ப் பொருள் கண்டு வாழ்வார் மூவர் எவர்?

(ஈ) கோப்பெருந்தேவி கண்ட தீக்கனா யாது?

(உ) கோலியாத்தின் போர்க்கோலத்தை விளக்குக.

(ஊ) இறந்த மகளைக் கண்டு சந்திரமதி எவ்வாறு புலம்பினாள்?

(எ) தேவாரம் – பெயர்க்காரணம் தருக.

2. பின்வரும் வினாக்களுள் ஒன்றனுக்கு மட்டும் பதினைந்து வரிகளில் விடை தருக. (1 × 6 = 6)

(அ) கண்ணகி வழக்குரைத்த நிதழ்ச்சியினைத் தொகுத்துரைக்க.

(ஆ) சீதை திரிசடை இவர்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடலை விவரி.

(இ) "நாயாயணா" என்னும் நாமம் தரும் நன்மைகளாகத் திருமங்கையாழ்வார் கூறுவன யாவை?

3. ஏதேனும் இரண்டனுக்கு மட்டும் இடஞ்சுட்டிப்பொருள் விளக்கம் தருக. (2 × 3 = 6)

(அ) "கள்வனைக் கோறல் கடுங்கோலன்று".

(ஆ) "ஏழை வேடனுக்க எம்பி நின் தம்பி".

(இ) "நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்".

(ஈ) "தோற்ற பாங்கினர் தொழும்பரென் றாகுவர்".

4. அடிபிறழாமல் எழுதுக. (3 × 2 = 6)

(அ) "பெரிது"என முடியும் குறள்.

(ஆ) 'உதிக்கின்ற செங்கதிர்' எனத் தொடங்கும் அபிராமி அந்தாதிப்பாடல்.

(இ) 'அடுத்தே வருந்தும்' எனத் தொடங்கும் திருவருட்பா பாடல்.

5. ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் ஆறு வரிகளுள் விடை தருக. (5 × 3 = 15)

(அ) அந்த மனிதன் நாளடைவில் இருகால் விலங்காவான்?

(ஆ) மனித சமுதாயத்தின் வியக்கத்தக்க வளர்ச்சி யாது?

(இ) சீவகனுக்கு அப்பெயர் எதன் பொருட்டுச் சூட்டப்பெற்றது?

(ஈ) நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் உள்ள வேற்றுமை யாது?

(உ) உடல் உறுதி பற்றிப் பாரதியார் கூறும் கருத்து யாது?

(ஊ) செய்தித்தாள்களின் பயன்கள் யாவை?

(எ) இளைஞர் கட்சியின் இலட்சியங்கள் யாவை?

6. பின்வரும் வினாக்களுள் ஒன்றனுக்கு மட்டும் பதினைந்து வரிகளில் விடை தருக. (1 × 6 = 6)

(அ) மணிமேகலையின் சமயப்பணி குறித்தெழுதுக.

(ஆ) சேமிப்புத் திட்டங்கள் குறித்தெழுதுக.

(இ) கல்வி கற்கும் முறை குறித்து எழுதுக.



7. (அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. (6 × 2 = 12)

(i) போலி என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

(ii) பகுபத உறுப்புகள் யாவை?

(iii) உரிச்சொல்லின் இலக்கணம் யாது?

(iv) புறப்பொருள் – விளக்குக.

(v) அசை எத்தனை வகைகப்படும்? அவை யாவை?

(vi) தற்குறிப்பேற்ற அணி – விளக்குக.

(அ) இலக்கணக் குறிப்பு தருக. (4 × 1 = 4)

(i) செழுஞ்சுடர்

(ii) மாநிலம்

(iii) சலசல

(iv) வேல்விழி

8. (அ) பின்வருவனற்றைச் செயல்பாட்டு வினைகளாக மாற்றுக. (2 × 1 = 2)

(i) வள்ளி கனியைக் கொய்கிறாள்

(ii) கண்ணன் ஓவியத்தை வரைந்தான்

(ஆ) வல்லினம் மிகுமிடங்கள் இரண்டனைச் சுட்டுக. (2 × 1 = 2)

(இ) பிழை நீக்கி எழுதுக. (2 × 1 = 2)

(i) வெத்தலை

(ii) வலது பக்கம்

(ஈ) வாக்கியத்தில் அமைத்தெழுதுக. (2 × 1 = 2)

(i) அடியற்ற மரம் போல

(ii) பசுமரத்தாணி போல

9. ஏதேனும் ஒன்றனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக (1 × 8 = 8)

(அ) சிக்கன வாழ்வே சீரிய வாழ்வு.

(ஆ) தொழிற்கல்வி.

(இ) இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்.

10. ஏதேனும் ஒன்றனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக. (1 × 8 = 8)

(அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற உன் நண்பனைப் பாராட்டி மடல் எழுதுக.

(ஆ) காணாமல் போன உனது மிதிவண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல் துறை ஆய்வாளருக்கு ஒரு விண்ணப்பம் தருக.

(இ) ஆறு தன் வரலாறு கூறுதல்.



11. இனிய தமிழில் மொழிபெயர்க்க. (1 × 6 = 6)

Long ago there lived an old farmer. He and this wife lived a small hut they loved each other and were happy. The old farmer was no very clever. He did many foolish things. But his wife said every time "my old man is right".